



# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கன்னியாகுமரி மாவட்டம்

## தேரூர் பேரூராட்சி (மலையிட கிராமம்)

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தேரூர் பேரூராட்சி, தேரூர் கிராமம், சர்வே எண் : 840/1, 840/2 - ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டப் பகுதி)

இணையதள விண்ணப்ப எண் : HYYGMW1U/2025

அளவு : 1:400

வ

**குறிப்புகள்**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | - 9000.00ச.மீ (2.22ஏக்கர்) | |
| மனைப்பிரிவு இடத்தின் எல்கை | - | |
| நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை | - | |
| கோரிய மனைகளின் எண்ணிக்கை | - 44 எண்ணம் | |
| ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை | - 44 எண்ணம் (மனைகள் 1 - 44) | |

**பொது ஒதுக்கீடு:** (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதி)

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | - 9000.00ச.மீ (2.22ஏக்கர்) |
| உத்தேச மனைப்பிரிவு சாலை (ம) மூலை முடக்குகளின் பரப்பளவு | - 3102.65ச.மீ |
| மீதமுள்ள இடத்தின் மொத்த பரப்பளவு | - 5897.35ச.மீ |

அரசாணை நிலை எண் : 18, ந.நி.(ம)கு.வ.(ந.ப.)துறை நாள்:04.02.2019, விதி-47(6)-ன் படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019-பிஏ2, நாள்:05.02.2020, CASE-V-ன்படி பூங்கா பரப்பளவு - 589.73ச.மீ ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

மேற்கண்ட பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கு அரசு வழிகாட்டி மதிப்பீட்டின்படி ரூ.3,76,255/- நாள்:18.07.2025 - ல் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**பொது உபயோகம்:** (TNCD&BR2019 விதி 47(8)-ன் படி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதி 1% ஒதுக்கீடு)

Ⓐஉள்ளாட்சிக்கு உபயோகத்திற்கு - 41.00ச.மீ(0.69%)

Ⓑதமிழ்நாடு மின் உற்பத்தி(ம)மின்பகிர்மான கழக(TANGEDCO) உபயோகத்திற்கு- 40.06ச.மீ(0.67%)

தான ஆவணம் எண்:**3043/2025, 3044/2025** நாள்:17.07.2025

**மூலை முடக்கு**

12.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்.

**நிபந்தனைகள்**

1. அரசாணை எண்:18, ந.நி.(ம)கு.வ.(ந.ப.1)துறை நாள்:04.02.2019, அரசாணை எண்:16,ந.நி.(ம)கு.வ.(ந.ப.1)துறை நாள்:31.01.2020-ன் படியும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019-பிஏ2, நாள்:05.02.2020, மற்றும் அரசாணை எண்:181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:09.12.2020--ன் படி உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள், மற்றும் பொது உபயோகத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும். மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழக உபயோக ஒதுக்கீட்டினை மின்சார வாரியத்திற்கும் தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும். மேலும் மேற்காணும் அரசாணைகளின் படி உத்தேச சாலைகளை நிர்வாக அதிகாரியால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் தார் சாலையாகவும், தேவையான அடிப்படை வசதிகளை இடத்தில் மனைப்பிரிவு உரிமையாளரால் அமைக்கப்பட்ட பின் அதனை உள்ளாட்சியால் உறுதி செய்து கொண்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.
2. தடையின்மை சான்றுகள்:
   I. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை கடிதம், K.Dis.No. HOTNFD/970/2025-TS4, நாள்:14.03.2025.
   II. உதவி இயக்குநர் புவியியல் மற்றும் சுரங்கத்துறை, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம், Rc.No.89/G&M/2025, நாள்: 17.03.2025.
   III. நாகர்கோவில், வருவாய்க் கோட்டாட்சியர் தடையின்மை சான்று எண்: B3/5274/2024 நாள்: 28.05.2025
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில், எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. இம்மனைப்பிரிவு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் (ம) சான்றுகள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதலானது எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை, அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 6'x4' - அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. The Tamilnadu Government in G.O.Ms. No.112, Housing and Urban Development Dept. Dated:22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, Market, Book, Sell or Offer for Sale, or Invite persons to purchase in any manner, any plot, any apartment or Building, as the case may be in Real Estate Project or part of it only after registering the real estate project with the Real Estate Regu latory Authority.
8. இம்மனைப்பிரிவில் அமையும் சாலைகளின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்றுச்சுவர் எழுப்புதல் கூடாது.
9. இம்மனைப்பிரிவின் எல்கையினை ஒட்டியுள்ள கால்வாயினை எந்தவித ஆக்கிரமைப்பும் இல்லாமல் அதன் போக்கில் நிலை நிறுத்த வேண்டும்.

**குறிப்புகள்**

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**SWP/ம.வ/க.கு.மா.ந.ஊ.அ.எண்: 34/2025**
**SWP/தி.அ/நா.உ.தி.கு.எண் : 45/2025**

அளவர்/ வரைவாளர் நிலை-III மேற்பார்வையாளர்

உறுப்பினர் செயலர் / உதவி இயக்குநர்
நாகர்கோவில் உள்ளூர் திட்டக்குழுமம் / மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கன்னியாகுமரி மாவட்டம்

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Kanniyakumari
Date:2025.07.28 19:05:48